# IN THE COURT OF SUBORDINATE JUDGE, SANKARI.

| MCOP. No. 695/2011 | | | |
|---|---|---|---|
| Name: | மாசிலாமணி | Religion: | இந்து |
| Father's Name: | ராமலிங்கம் | Caste: | |
| Village: | பெருச்சாகவுண்டம் பாளையம் | Calling: | --- |
| Taluk: | பரமத்திவேலூர் | Age: | 36 |

Date: 1.8.2019 – PW-1

மனுதாரர் தரப்பில் சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்விக்கப்பட்டு 2 ஆம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி.

நான் தாக்கல் செய்துள்ள முதல் தகவல் அறிக்கையின் அடிப்படையில் நஷ்டஈடு கோரி இந்த மனு தாக்கல் செய்துள்ளேன் என்றால் ஆமாம். நான் தாக்கல் செய்துள்ள முதல் தகவல் அறிக்கையில் உள்ள விபரங்கள் சரியானதுதான். இருசக்கர வாகனத்தை நான்தான் ஓட்டிச் சென்றேன் என்றால் ஆமாம். அதன் உரிமையாளர் யார் என்றால் விஜயகுமார். நான் தாக்கல் செய்துள்ள சி.எம். மருத்துவமனையின் டிஸ்சார்ஜ் சம்மரி எனக்கு சம்மந்தப்பட்டதல்ல என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள சி.எம். மருத்துவமனையின் டிஸ்சார்ஜ் சம்மரியில் 26.6.2010 தேதியில் திருமதி. மாசிலாமணி சி.எம். மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக காட்டப்பட்டுள்ளது என்றால் ஆமாம். அதில் பக்கம் இரண்டில் அதற்கு முந்தைய நாள் 25.6.2010 தேதியில் அறுவை சிகிச்சை செய்ததாக காட்டப்பட்டுள்ளது என்றால் ஆமாம். 21.10.2016 ல் ஸ்கேன் எடுக்கப்பட்டதாக காட்டப்பட்டுள்ளது என்றால் ஆமாம். வழக்கிற்காக முன்னுக்குப் பின் முரணாக தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நான் விபத்தின் போது ஹெல்மெட் அணிந்திருந்தேனா என்றால் ஆமாம். நான் உண்மையிலேயே ஹெல்மெட் அணிந்திருந்தால் தலையிலோ முகத்திலோ அடிபட்டிருக்க வாய்ப்பில்லை என்றாலும், ஹெல்மெட் அணியாததால்தான் முகத்தில் அடிபட்டுள்ளது என்றால் சரியல்ல. வாகனம் எனக்கு சொந்தமானது அல்ல என்பதால் நான் ஹெல்மெட் அணிந்திருக்க வாய்பில்லை என்றாலும், அணிந்திருந்ததாக வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. முதல் தகவல் அறிக்கையில் என்னையே குற்றவாளியாக காட்டப்பட்டுள்ளதால் என்னுடைய தவறுக்கு நானே நஷ்டஈடு கோர முடியாது என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள மனுவில் சட்டப்பிரிவுகளை தவறாக காட்டப்பட்டுள்ளதால் இந்த மனு நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. விபத்திற்கு முன்பு என்ன வேலை செய்தேன் என்றால் டிரைவர் வேலை பார்த்து வந்தேன். வேறு எந்த தொழிலும் செய்யவில்லை என்றால் ஆமாம். மனுவில் பால் வியாபாரம் செய்ததாகவும் விவசாயம் செய்ததாகவும் சொல்லியிருந்தால் அது தவறு என்றால் ஆமாம். நான் தாக்கல் செய்துள்ள மனுவிலேயே டிரைவர் வேலை பார்த்ததாக சொல்லவில்லை என்றாலும், தற்போது மனுவிற்காக டிரைவர் வேலை பார்த்ததாக பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள மருத்துவ பில்கள் மனுவிற்காக தயார் செய்யப்பட்டுள்ளது என்றாலும், நான் கோரியுள்ள இழப்பீடு அதிகம் என்றாலும் சரியல்ல. விபத்து சமயத்தில் TN-34-J-5438 என்ற

வாகனத்திற்கு காப்பீடு செய்யப்பட்டதாக சொல்லியுள்ளேன். அதற்கு எந்த ஆவணமும் இல்லாததால் வாகனமானது 3ஆம் எதிர்மனுதாரர் நிறுவனத்தில் காப்பீடு செய்யப்படவில்லை என்றால் சரியல்ல.

மறு விசாரணை – இல்லை.

Sd/- Masilamani

Sd/- M. Mekala Mythili,
Sub Judge, Sankari.